பக்கங்கள்: 09 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | வைகாசி 21 புதன்கிழமை 03.06.2020 | கதிர் 78

## தீர்ப்புக்குத் தலைவணங்குகின்றோம்

# சர்வாதிகாரிகளின் ஆட்சிக்கு தேர்தலில் முடிவு கட்டுவோம்!

### சஜித் திடசங்கற்பம்

கொழும்பு, ஜூன் 03

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்கின்றோம். அதற்குத் தலைவணங்குகின்றோம். பொதுத் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருக்கின்றோம். சர்வாதிகாரிகளின் குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்ட உறுதிபூண்டுள்ளோம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்பு வர்த்தமானி அறிவிப்பு, நாடாளுமன்றத் தேர்தல் திகதி (ஜூன் 20) வர்த்தமானி அறிவிப்பு ஆகியவற்றுக்கு

2

# இராணுவ ஆட்சிக்கான அடித்தளம் இடப்பட்டது

## முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளை மட்டும் உள்ளடக்கிய ஜனாதிபதி செயலணி இன்று அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 03

பாதுகாப்பான நாடு, ஒழுக்கமான, நீதியான, சட்டத்தை மதிக்கும் சமூகம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

3

# மோ.சைக்கிள் பார ஊர்தியில் மோதிய விபத்தில் 2 பேர் உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 03

வவுனியா கனகராயன்குளம் ஏ - 9 வீதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் அலுவலர் ஒருவர் உட்பட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பில் பணியாற்றும் பொலிஸ் அலுவலரான ஜெயமூர்த்தி திசிகாந்தன் விடுமுறையில் தனது நண்பருடன் மோட்டார் சைக்கிள் வீடு திரும்பிக்

2

# தேர்தல் திகதித் தீர்மானம் இனி அடுத்த வாரம்தான்!

## தேர்தல் ஆணையத்தின் நேற்றைய கூட்டத்தில் அது குறித்து எதுவுமே பேசப்படவில்லையாம்

கொழும்பு, ஜூன் 03

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் பிரகடனத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்காமல் நிராகரித்தமையை அடுத்து -

பொதுத் தேர்தலை நடத்துவதற்கான புதிய திகதியை தேர்தல் ஆணையம் இன்று அறிவிக்கும் எனப் பெருத்த எதிர்பார்ப்போடு நாடு இருந்தது.

ஆனால், தேர்தல் ஆணையம் நேற்றுக் கூடிய போது தேர்தல் திகதியைத் தீர்மானிப்பது குறித்துப் பேசப்படவில்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் ஆணையம் இன்று காலை கூடும் என்றும் -

2

# கிழக்கு மாகாணத் தொல்லியல் பாதுகாப்புக்கு 11 சிங்களவர்கள் நியமனம் ஓர் இனவாதச் செயல்!

## முன்னாள் எம்.பி. பா.அரியநேத்திரன் கண்டனம்

மட்டகளப்பு, ஜூன் 03

கிழக்கு மாகாணத்தில் முற்று முழுதாக தமிழர்களைப் புறக்கணித்து தொல்பொருள் இடங்களை அடையாளப்படுத்திப் பாதுகாப்பதற்குச் சிங்களவர்களை மட்டுமே அடக்கிய செயலணியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உருவாக்கியிருக்கின்றமை ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் வேதனைப்படுத்தும் இனவாதச் செயல் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமி ழரசு கட்சி பட்டிருப்பு தொகுதி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

2

# அடுத்த வாரம் முதல் அரச ஊழியர்கள் தினமும் பணிக்கு

கொழும்பு, ஜூன் 03

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் இதுவரை வழங்கப்பட்டுவந்த அரச ஊழியர்களுக்கான விடுமுறைகள் மற்றும் நிவாரணத் தினங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளன.

அடுத்த வாரம் முதல் முன்பு போல தினமும் பணிகளுக்கு அரச ஊழியர்களை அழைக்க அரச நிர்வாக அமைச்சு முடிவு செய்துள்ளது.

# வென்றது ஜனநாயக உரிமை! தோற்றது எதிரணி வியூகம்!!

## மகிழ்ச்சிக் கடலில் மஹிந்தர்



கொழும்பு, ஜூன் 03

நாடாளுமன்றத் தேர்தலுக்கான மனுக்களைத்தள்ளுபடிசெய்து உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பால் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைவென்றுள்ளது. தேர்தலைக்காலம்தாழ்த்த எதிரணியினர் வகுத்த வியூகம்

2

# முன்னாள் பெண் போராளி ஹெரோயினுடன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 03

முன்னாள் பெண் பேராளி ஒருவர் ஹெரோயினுடன் நேற்று யாழ்ப்பாணம் போதைத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அரியாலை, நெடுங்குளத்தில் போதைப் பொருளை விற்பனை செய்தபோது

2

# பாசையூர்க் கடலில் இளைஞனின் சடலம்

யாழ்ப்பாணம், ஜூன் 03

யாழ்ப்பாணம் பாசையூர் கடலில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பாசையூர் பகுதியைச் சேர்ந்த சில்வெஸ்ரர் சஜித் (வயது - 27) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இன்று புதன்கிழமை பூம்புகார் கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது இந்த இளைஞர் காணாமல் போயுள்ளனர்.

இதனையடுத்து மீனவர்கள் ஒன்றுகூடி அவரைத் தேடியபோது, பூம்புகார் கடற்பகுதியில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

மீனவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய பின்னர், யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் ஆகியோர் சடலத்தைப் பார்வையிட்டனர்.

இந்நிலையில், உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தேர்தல் திகதித்..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அப்போது புதிய தேர்தல் குறித்துத் தீர்மானிக்கப்படும் என்றும் -

பிரதம தேர்தல் ஆணையாளரை மேற்கோள்காட்டி நேற்றுச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் தேர்தல் ஆணையாளர்கள் மூவரில் ஒருவர் நேற்றுக் காலை கூட்டத்துக்குச் சமுகம் தரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுடனான கூட்டம் நடைபெற்றது. அதில் மூன்று தேர்தல் ஆணையாளர்களும் பங்குபற்றினர்.

அந்தக் கூட்டம் முடிந்ததும் அவர்கள் மூவரும் புறப்பட்டனர்.

இனி வரும் திங்கட்கிழமை 8 ஆம் திகதி மீண்டும் தேர்தல் ஆணையம் கூடவிருக்கின்றது. எனினும் அன்றைய தினமும் புதிய தேர்தல் திகதி தீர்மானிக்கப்படுமா என்பது சந்தேகமே என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர்களில் ஒருவரிடம் கேட்டபோது -

"சுகாதார அதிகாரிகளுடன் பேசி ஒரு தீர்மானம் எடுத்த பின்னரே தேர்தல்களை எப்போது நடத்துவது என்று முடிவு செய்வது என்றும், அதுவரை தேர்தல் திகதி குறித்து எதுவும் பேசுவதில்லை என்றும் ஏற்கனவே தீர்மானித்துள்ளோம்.

"எனவே தேர்தல் திகதி குறித்து எந்த ஊகமும் இப்போது உங்களுக்குக் கூற முடியாது. இன்று (புதனன்று) இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் பேசி இருக்கின்றோம். இனித் தேர்தல் ஆணையத்தின் கூட்டம் திங்கட்கிழமை 8 ஆம் திகதிதான். இன்னமும் உலக சுகாதார ஸ்தாபனப் பிரதிநிதிகள் உட்பட பல சுகாதாரத் தரப்புகளுடன் நாங்கள் பேச வேண்டியுள்ளது. அதன் பின்னர் தான் ஆணையம் தேர்தல் திகதி குறித்து முடிவு செய்யும்" - என்றார் அவர்.

## முன்னாள் பெண் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து 2.3 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவரும் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்ட மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் இருந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சர்வாதிகாரிகளின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ள நிலையில் மேற்படி கருத்தை அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாவின் பாதிப்புக்குள் மக்கள் சிக்கித் தவித்தபோது அதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டே நாடாளுமன்றத் தேர்தலை எதிர்த்தோம். ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடத்த வேண்டாம் என்று வலியுறுத்தினோம். எமது இந்த வலியுறுத்தலை அடுத்தே ஜூன் 20ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என உயர்நீதிமன்றத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

தேர்தலுக்கு எதிரான மனுக்கள் தற்போது தள்ளுபடி செய்யப்பட்டாலும் ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடக்காது என்பது உறுதியாகியுள்ளது. எனவே, புதிய தேர்தல் திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும். கொரோனா வைரஸிலிருந்து மக்களைப் பாதுகாத்து நீதியான தேர்தல் நடக்க நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார்.

# திருக்கேதீஸ்வர ஆலயத்தின் கும்பாபிசேகம் ஒத்திவைப்பு

மன்னார், ஜூன் 03

மன்னார் மாவட்டத்தில் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வர திருத்தலத்தின் கும்பாபிசேக திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறாது என திருக்கேதீஸ்வர திருத்தல திருப்பணிச் சபையின் இணைச் செயலாளர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் ஏற்பட்டுள்ள 'கொரோனா' வைரஸ் தொற்று காரணமாக அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டத்தால் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மஹா கும்பாபிசேக திருவிழா அன்றைய தினம் நடைபெறாது. மீண்டும் கும்பாபிசேகம் நடத்துவது தொடர்பான விவரங்களும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலும் 'கொரோனா' வைரஸ் தாக்கம் இன்னும் நாட்டில் முற்றாக குறைவடையாத நிலையில் வெளி இடங்களில் இருந்து பக்தர்கள் திருவிழாவுக்கு ஒன்று கூடுவது அனைத்துத் தரப்பினருக்கும் பெரும் சிரமங்களை ஏற்படுத்தும்.

ஆகவே இதுபோன்ற பலவிதமான காரணங்களை ஆராய்ந்து இந்த மாதம் 10 திகதி நடைபெற இருந்த கும்பாபிசேகத் திருவிழா தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் கும்பாபிசேகம் நடத்துவது தொடர்பான விவரங்களும் திகதியும் விரைவில் அறிவிக்கப்படும் என திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபையின் இணைச் செயலாளர் எஸ்.எஸ். இராமகிருஷ்ணன் மேலும் தெரிவித்துள்ளார்.

## வென்றது ஜனநாயக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தோல்வியடைந்துள்ளது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தது. புதிய தேர்தல் திகதியைத் தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருந்தது. இவற்றையெல்லாம் சவாலுக்குட்படுத்தியே எதிரணியினர் உயர்நீதிமன்றம் சென்றிருந்தனர். ஆனால், இறுதியில் அவர்களுக்குத் தோல்விதான் பரிசாகக் கிடைத்தது.

மக்களின் ஆதரவு இருக்கும் எவரும் தேர்தலுக்கு அஞ்சி ஓடமாட்டார்கள். இந்தநிலையில், மக்களின் ஆதரவு இன்றி தங்களுக்குள் முட்டிமோதிக் கொண்டிருக்கும் எதிரணியினர் மக்களின் ஜனநாயக உரிமையை மழுங்கடிக்கச் செய்ய முயன்றனர். ஆனால், அவர்களின் முயற்சி பயனளிக்கவில்லை.

நாம் எதிர்பார்த்த மாதிரி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகியுள்ளது. எனவே, நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தலின் பின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பலமிக்க ஆட்சி நாடாளுமன்றத்தில் உருவாகும் - என்றார்.

## மோ.சைக்கிள் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டிருந்தபோது விபத்து நிகழ்ந்தது.

யாழ்ப்பாணம், அரசடி வீதியைச் சேர்ந்தவரான திசிகாந்தன் மற்றும் அவரது நண்பரான பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான நிசான் யனுஸ்டன் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

காலை 5:30 மணியளவில் கனகராயன்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்த இவர்களின் உந்துருளி வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் வேகமாக மோதியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரது சடலங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டன.

உடற்கூறுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். கனகராயன் குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பாசையூர்க் கடலில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிழக்கு மாகாண தொல்பொருள் பாதுகாப்புக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொல்பொருள் இடங்களைப் பார்வையிட்டு அடையாளப்படுத்தி அதனை பாதுகாக்க அண்மையில் ஜனாதிபதி அவர்களால் 11 பேர் கொண்ட குழு பெயரிடப்பட்டு நியமிக்கப்பட்டமை தொடர்பாக மேலும் கருத்து கூறிய அவர் தனது கண்டனத்தை கடுமையாகப் பதிவு செய்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தின் தொல்லியல் இடங்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் 11 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணியை கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்து இருக்கிறார். பௌத்த மதம் சார்ந்த பிக்குகள் , இராணுவ அதிகாரி மற்றும் பொலிஸ் அதிகாரி உள்ளடங்கலாக 11 பேர் இந்த ஜனாதிபதி செயலணிக்கு நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

எல்லாவல மேதானந்தா தேரர், பனமுரே திலகவன்ஸ தேரர் - வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான பிரதான மத குரு, மேஜர் ஜெனரல் (ஓய்வு ) கமல் குணரத்ன - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மருத்துவர் கலாநிதி பண்டாரா திசநாயக்க - தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர், செல்வி சந்திரா ஹெரத் - காணி ஆணையாளர், செல்வி ஏ.எல். எஸ்.சி.பெரேரா - பிரதம நில அளவையாளர், பேராசிரியர் ராஜ்குமார் சோமதேவா - சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலை கழகம், பேராசிரியர் கபில குணவர்தன - மருத்துவ பீடம், பேராதெனிய பல்கலைக்கழகம், தேசபந்து தென்னகோன் - சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி. திசநாயக்க - கிழக்கு மாகாண காணி ஆணையாளர், திலித் ஜெயவீரா - பணிப்பாளர், தெரண ஊடக வலையமைப்பு ஆகிய 11 பேரும் ஜனாதிபதி செயலணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாக கொண்ட தமிழ் பேசும் சிறுபான்மை சமூகம் சார்ந்த நிபுணர்களை முற்று முழுதாக இந்த ஜனாதிபதி செயலணியில் தவிர்த்து இருக்கிறார்கள்

மறுபுறம் இனவாதம் பேசி வரும் பிக்குகள் மற்றும் இராணுவ பொலிஸ் அதிகாரிகளை நியமனம் செய்து இருக்கிறார்கள்.

இதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகமான கிழக்கு மாகாணத்தை முற்று முழுதாகக் கபளீகரம் செய்யும் திட்டத்தை ராஜபக்ஷ நிர்வாகம் முன்வைத்து இருக்கிறது.

பொதுத்தேர்தல் விரைவில் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகையில் கிழக்கை மீட்கப்போவதாக பிரசாரம் செய்யும் கட்சிகளும் மட்டக்களப்பில் பிரதேசவாதம் பேசி கிழக்கை மீட்போம் என கூறி வாக்குகளை கேட்கும் கட்சிகளும் இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள்.

தமிழ்தேசிய கூட்டமைப்பை பொறுத்தவரை இவ்வாறான செயல்பாடுகளை முழுமையாகத் தடுப்பதற்காகவே வடக்கு, கிழக்கு இணைந்த ஓர் அரசியல் தீர்வு வேண்டும் என்பதை தொடர்ந்தும் நாம் வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறான செயல்களைத் தடுக்க வேண்டுமானால் தமிழ் மக்களின் அரசியல் பலம் ஓங்கவேண்டும். அதற்கு தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்தேசிய கூட்டமைப்பை பலப்படுத்தவேண்டும். அந்த பலத்தை எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்து ஒற்றுமையை வெளிக்காட்ட அனைவரும் ஒன்றுபட வேண்டும் - எனவும் மேலும் கூறினார்.

# குணமடைவு - 836 சிகிச்சையில் - 836

## நேற்று 40 பேர் அடையாளம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 13 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 836 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று புதிய தொற்றாளர்களாக 40 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதற்கமைய கட்டாரிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த 27 பேரும், குவைத்திலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த 03 பேரும், டுபாயிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவரும், ரஷ்யாவிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவரும், தனிமைப்படுத்தப்பட்டிருந்த 07 கடற்படை சிப்பாய்களும், கடற்படை சிப்பாய் தொற்றாளருடன் தொடர்புடைய ஒருவரும் நேற்று புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்ட 1,683 பேரில் தற்போது 836 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதே வேளை, 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தின் 66 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# கவுணாவத்தை வேள்விக்கு தடல்புடலான ஆயத்தங்கள்

## அனுமதி வழங்கப்படவில்லை என்கிறது சுகாதாரப் பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 03

கவுணாவத்தை வைரவர் ஆலய வேள்விக்கான ஆயத்தங்கள் நடந்து வருகின்றன. கொரோனா அபாயத்திலும் நூற்றுக்கணக்கான கடாக்கள் பலியிடக் கொண்டு வரப்படவுள்ளன.

எதிர்வரும் 6ஆம் திகதி அதிகாலை கவுணாவத்தை ஆலய வேள்வி நடக்கவுள்ளது. இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. இம்முறை சுமார் 100 இற்கும் குறையாத கடாக்கள் பலியிடத் திட்டமிடப்பட்டு வருகிறது.

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக மக்கள் ஒன்று கூடுவதில் கட்டுப்பாடுகள் உள்ளன. ஆலய வழிபாடுகள் எதிர்வரும் 9ஆம் திகதி வரை வரையறுக்கப்பட்டுள்ளன. சுகாதார விதிமுறைகளின்படி 5 பேருக்கு உட்பட்ட தொகையினரே வழிபாட்டுக்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

இந்த அடிப்படையில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியிடம், கவுணாவத்தை ஆலய நிர்வாகம் திருவிழாவுக்காக விண்ணப்பித்ததாகவும், வரையறுக்கப்பட்ட நபர்களுடன் திருவிழாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

வேள்வி நடத்தத் தாம் அனுமதிக்கவில்லையெனச் சுகாதார வைத்திய

(03 ஆம் பக்கம் பார்க்க)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மோசமான பொருளாதார நிலை

கொரோனாப் பேரிடரின் மிகப் பின்னடைவான விளைவை பொருளாதாரத் துறையில் இலங்கை எதிர்கொள்ளப் போவதாக எச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடி கொரோனாப் பேரிடரினால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதன் விளைவு நாட்டின் கழுத்தைச் சுற்றியிருப்பதாக அபாயச் சங்கு ஊதியிருக்கின்றது இலங்கை மத்திய வங்கி.

உள்நாட்டு மொத்த உற்பத்தி மற்றும் தொழில்வாண்மை வீழ்ச்சி என்பவற்றால் ஏற்பட்ட பாதிப்புகள், பின்னடைவுகள் ஒரு புறம் இருக்க, ஏனைய மூன்று முக்கிய துறைகளில் ஏற்பட்ட வருமான வீழ்ச்சியே உடனடிப் பாதிப்புகளுக்குப் பிரதான காரணமாக அமையப் போகின்றது.

முக்கியமாக உல்லாசப் பயணத்துறை, வெளிநாடுகளில் இருந்து மாதாந்தம் வரும் கொடுப்பனவுகள், வெளிநாட்டு முதலீடு ஆகிய மூன்று துறைகள் மூலமும் கிட்டும் அந்நிய செலாவணி அடியோடு சுருங்கிப் போனமை நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

தாங்க முடியாதபெரும் நெருக்கடியை – பின்னடைவை – இந்தத் துறைகளின் இழப்பு நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தியிருப்பதாக மத்திய வங்கி குறிப்பிட்டிருக்கின்றது.

மார்ச் நடுப்பகுதியில் இருந்து கடந்த இரண்டரை மாதங்களுக்கு மேலாக இலங்கைக்கான விமான சேவைகள், பயணிகள் கப்பல் சேவை எல்லாம் முற்றாகத் தடை செய்யப்பட்டு விட்டன. அதனால் உல்லாசப் பயணத்துறை முற்றிலுமாகப் படுத்து விட்டது.

கடந்த ஆண்டிலும் ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதலை அடுத்துப் பொருளாதாரத்துறை பெரும் சரிவைக் கண்டாலும் கொழும்பின் துரித நடவடிக்கைத் திட்டங்கள் மூலம் அதன் மீளெழுச்சி உறுதிப்படுத்தப்பட்டது.

எனினும், மீண்டும் அத்துறை – உல்லாசப் பயண வர்த்தகம் – அழுத்தமாகக் கால் பதித்து எழுச்சி கொள்ள முதல் கொரோனா வைரஸ் தாக்கம் அதனை மீளவும் அடித்து வீழ்த்தி விட்டது.

உல்லாசப் பயணத்துறையை மீண்டும் மேம்படுத்துவதற்கான திட்டங்கள், முயற்சிகள் குறித்து கொழும்பு அதிகம் ஈடுபாடு காட்டினாலும் கூட அது மீண்டும் உயிர்ப்புப் பெறுவதற்கான சாத்தியங்களும், வாய்ப்புகளும் மிகக் குறைவாகவே தென்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றுப் பரவலுக்குத் தீர்வு காணப்படுவதற்கு முன்னர், இலங்கையில் உல்லாசப் பயணத்துறை மீளுயிர்ப்புப் பெறும் என்று நம்புவதற்கு இடமில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விமானங்கள் நாட்டுக்குள் வந்தாலும் அவற்றின் மூலம் வெளிநாட்டில் இருந்து வரும் ஒவ்வொரு பயணியும் இரண்டு வார காலத் தனிமைப்படுத்துதலுக்குப் பின்னரே சமூகத்துக்குள் கலக்க அனுமதிக்கப்படுகின்றனர். இந்த இரண்டு வார கால கட்டாயத் தனிமைப்படுத்தல் நீடிக்கும் வரை இலங்கைக்கு உல்லாசப் பயணிகள் வருகை மேம்படவோ, அதன் மூலம் பழைய வருமானமீட்டும் நிலைமை ஏற்படலோ வாய்ப்பில்லை என்றே தோன்றுகின்றது.

அதே போன்றதுதான் வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் மூலம் கிடைக்கும் வருமானமும்.

அந்தந்த நாடுகளில் நிலைமை வழமைக்குத் திரும்பும் வரை – அப்படித் திரும்பிய பின்னர் அங்கு பணிபுரியும் இலங்கைத் தொடர்பாளர்கள் தத்தமது நிலைமையை மீள ஸ்திரப்படுத்திக் கொள்ளும் வரை – அங்கிருந்து பணம் இலங்கைக்கு அனுப்பப்படும் சாத்தியங்கள் குறைவாகவே இருக்கும்.

இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகள் கிட்டுவது கூட இனி வரும் காலத்தில் முயல்கொம்பாகத்தான் இருக்கப் போகின்றது.

வெளிநாட்டில் இருந்து வருவோர் நாட்டுக்குள் இலகுவாக நுழைவதற்கு இடையூறாக கொரோனத் தொற்று அச்சம் இருக்கும் வரை இந்த நெருக்கடிகள் தணிவதற்கான வாய்ப்புகள் அடியோடு இல்லை என்றே கூறலாம்.

நாட்டின் நாணயமான ரூபாவின் பெறுமதியும் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

கொரோனா நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் – மார்ச் 2020 இறுதியில் – வெளிநாட்டு இறக்குமதிக்குத் தேவையான சேமிப்பாக 750 கோடி அமெரிக்க டொலரே இருந்தது. இது, இறக்குமதி விடயத்தில் நான்கரை மாதத்துக்குப் போதுமான தொகைதான். அப்படியானால் அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்குப் பிறகு நிலைமை மோசம்தான். என்ன செய்யப் போகிறது அரசு?

# வவுனியாவில் பூட்டிய வீட்டுக்குள் அழுகிய நிலையில் சடலம் மீட்பு





வவுனியாவில் பூட்டிய வீட்டிலிருந்து கை, கால் கட்டப்பட்ட நிலையில் அழுகிப் போயிருந்த சடலம் ஒன்று இன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது.

வவுனியா காத்தார் சின்னகுளம் நான்காம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் இருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டது.

உயிரிழந்தவர் 30 வயது மதிக்கத்தக்க இளைஞர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்டபோது பெரும்பாலும் அழுகிப் போயிருந்த சடலத்தின் கை மற்றும் கால்கள் கயிற்றினால் கட்டப்பட்டிருந்தன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மீட்கப்பட்ட வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதாக அயலவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் தூக்கில் தொங்கிய நிலையில் இருந்த சடலத்தைக் கண்டனர்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் கொழும்பு பகுதியை சேர்ந்தவர் என்றும் குறித்த வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தார் எனவும் அவரது மனைவி கருத்து முரண்பாடு காரணமாக அண்மையில் அவரை விட்டுப் பிரிந்து தனது உறவினர் வீட்டிற்குச் சென்றார் என்றும் அயலவர்கள் தெரிவித்தனர்.

தடயவியலாளர்களின் உதவியுடன் விசாரணையைத் தொடங்கியிருக்கும் பொலிஸார் இளைஞனின் இறப்பிற்கு கொலைகாரணமாக இருக்குமா என்ற கோணத்திலும் விசாரித்து வருகின்றனர்.

## கவுணாவத்தை வேள்விக்கு தடல்புடலான ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி பணிமனையால் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நாளில் பொசன் பௌர்ணமி தினமாகையால் இறைச்சிக் கடைகள் திறக்க அனுமதிக்கப்படமாட்டாது. இதனால் கவுணாவத்தையில் மிருகங்களை வெட்டவும் பொலிஸார் அனுமதிக்க மாட்டார்கள் எனச் சுகாதாரத்துறை பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார்.

## இராணுவ ஆட்சிக்கான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முந்நாள், இந்நாள் முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளை உள்ளடக்கியதாக அறிவிக்கப்பட்டிருக்கும் இந்தச் செயலணி நாட்டில் இராணுவமயப்பட்ட ஆட்சியை நிலை நிறுத்துவதற்கான முயற்சி என்கிற சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

ஜனநாயக நாடான இலங்கை மெல்ல மெல்ல இராணுவ ஆட்சியை நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றது என்ற சந்தேகத்தை இது வலுக்கச் செய்திருக்கிறது. நாட்டின் பெரும்பாலான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்க க் கூடியதாகத் தோன்றும் இந்தச் செயலணியின் நியமனம் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட உள்ளதற்குச் சற்று முன்னதாக வந்துள்ளது.

புதிய செயலணி தொடர்பான அரச வர்த்தமானி அறிவிப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் செயலணியின் தலைவராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சின் முதுநிலை உதவிச் செயலாளர் டி.எம்.எஸ்.திசநாயக்க இந்தச் செயலணியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் டி சில்வா, விமானப் படைத் தளபதி ஏயார் மார்ஷல் சுமங்கள டயஸ், பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னே, சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் விஜித்த ரவிபிரிய, தேசிய புலனாய்வுச் சேவைத் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ், தேசிய புலனாய்வுச் சேவைப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலி, இராணுவப் புலனாய்வுப்பிரிவுப் பணிப்பாளர் ஏ.எஸ்.ஹேவவிதாரன, கடற்படைப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் கப்டன் எஸ்.ஜே.குமார, விமானப் படை புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் ஏயார் கொமாடோர் எம்.டி.ஜே.வசங்க, சிறப்பு அதிரடிப் படைப் பொறுப்பாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி.சி.ஏ.டனபால, பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தர ஆகியோர் இந்த ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சமூகத்தின் சுதந்திரமானதும் அமைதியானதுமான இருப்புக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் நாட்டின் சில இடங்களில் தற்போது உருவாகி வரும் சட்டத்தை மீறும் சமூகக் குழுக்களின் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதே இந்தப் பணிக்குழுவின் நடவடிக்கையாக இருக்கும்.

போதைப் பொருளைக் கட்டுப்படுத்துவது, தரை- வான் மற்றும் கடல் மார்க்கமாகப் போதைப் பொருள் நாட்டுக்குள் வருவதைத் தடுத்து நிறுத்துவது என்பவற்றுடன் போதைப் பொருள் விநியோகத்தை நாட்டுக்குள் முற்றாக முடக்கி போதைப் பொருள் பயன்பாட்டால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பை நிவர்த்தி செய்யும் விடயத்தில் இந்தச் செயலணி கவனம் செலுத்தும்.

நாட்டுக்கு வெளியே இருந்துகொண்டு நாட்டுக்குள் சட்டவிரோத மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளை மேற்கொள்வோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மற்றும் சிறைச்சா லைகளுக்கு நடக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளை விசாரித்து தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது ஆகியனவும் இந்தச் செயலணியின் பணிகளாக இருக்கும்.

குறித்தொதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள பணிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவும் அறிவுறுத்தல்களை வழங்குவதற்குமான அதிகாரமும் ஜனாதிபதியால் இந்தச் செயலணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச அதிகாரிகளுக்கும் இந்தச் செயலணி தமது பணித் தேவைக்கேற்ப ஒத்துழைக்குமாறு அறிவுறுத்தலாம் அல்லது கோரிக்கை விடுக்கலாம். அப்படியான சமயத்தில் குறித்த நபர் அதனை கட்டாயம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

செயலணியால் வழங்கப்படும் அறிவுறுத்தல் அல்லது கோரிக்கையை நிறைவேற்ற பொது நிர்வாக அதிகாரிகள், அமைச்சு அலுவலர்கள், அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் தாமதித்தால் அல்லது நிறைவேற்றத் தவறினால் அது குறித்து செயலணி நேரடியாகத் தனக்கு அறிக்கையிடவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோடி - ட்ரம்ப் என்ன பேசினர்?



இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பும் நேற்றைய தினம் தொலைபேசி மூலம் உரையாடினார் என்று இந்திய அயலுறவுத் துறை தெரிவித்தது.

இந்த தொலை பேசி உரையாடலின்போது அமெரிக்காவில் நடைபெற உள்ள ஜி -7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று ட்ரம்ப் மோடிக்கு அழைப்பு விடுத்தார்.

ஜோர்ச் பிளாய்ட் சாவின் பின்பு அமெரிக்காவில் நிலவும் சூழல் குறித்து மோடி ட்ரம்பிடம் கவலை தெரிவித்ததாகவும்தற்போதைய சூழல்விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்தியா மற்றும் சீனா எல்லையில் நிலவும் பதற்றம், உலக சுகாதார நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்தும் இரு நாடுகளின் தலைவர்களும் விவாதித்ததாகவும் இந்திய வெளியுறவுத் துறை மேலும் தெரிவித்தது.

## முஸ்லிம்கள் குறித்து அவதூறா? மருத்துவர் அதை மறுத்து பதில்

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலம் கான் பூரில் உள்ள ஜி.எஸ்.வி.ம். எனும் மருத்துவக்கல் லூரியின் முதல்வர் மருத்துவர் ஆர்த்தி லால்சந் தானி பேசும் காணொலி ஒன்று அண்மையில் வெளியாகிப் பெரும் பர பரப்பை ஏற்படுத்தியிருந் தது.

அந்தக் காணோளியில் அவர், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவரும் முஸ்லிம்களைத் தீவிரவாதிகள் என்றும், அவர் களைச் சிறையில் அடைக்க வேண்டும் என்றும் கூறினார்.



அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதன் மூலம் மருத்துவர்களின் உழைப்பு வீணாகிறது. அரசும் தேவையில்லாமல் ஆயிரக்கணக்கில் செலவழிக்கிறது என்றார். மருத்துவர் ஆர்த்தி லால்சந்தானி வீட்டில் அவர் சில செய்தியாளர்க ளிடம் பேசும் போது இந்தக் காணொலிப் பதிவு செய்யப்பட்டதாக இருந்தது.

இது வெளியாகியதும் மருத்துவர் ஆர்த்தி லால்சந்தானிக்கு எதிராகச் சில முஸ்லிம் அமைப் புகள் முறைப்பாடுகளைப் பதிவு செய்தன. இந்த நிலையில் இதற்கு விளக்கம் அளித்துள்ள டாக்டர் ஆர்த்தி லால்சந்தினி, தனது நற்பெயரைக் குக்களங்கம் விளைவிக்க வேண்டும் என்பதற்காக 70 நாள்களுக்கு முன்பு பதிவு செய்யப்பட்ட காணொளியை மாற்றியமைத்து வெளியிட்டுள் ளனர் என்றுள்ளார். என்னை மிரட்டிப் பணம் பெற வேண்டும் என்பதற்காக, தப்லிக் ஜமாத்தை போன்ற வார்த்தைகளைச் சேர்த்துச் செய்தியாளர் வெளியிட்டுள்ளார். அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளேன். என்றுள்ளார்.

## கருணாநிதியின் 97ஆவது பிறந்தநாள் இன்று!



தமிழகம், ஜூன்3

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி யின் 97ஆவது பிறந்த தினம் இன்றாகும். 1969ஆம் ஆண்டில் முதன்முறையாகத் தமிழக முதல்வரானார். தமிழக முதல்வராக ஐந்துமுறை பதவிவகித்தவர். 'தூக்குமேடை' நாடகத்தின் போது எம். ஆர். ராதா, இவருக்குக் 'கலைஞர்' என்ற பட்டம் அளித்தார். தமிழக அரசியல் களத் தில் மிளிர்ந்த கருணாநிதி ஈழத்து அரசியலிலும் செல்வாக்குச் செலுத்திய நபராவார். ஈழ அரசிய லில் அவரது ஈடுபாடு குறித்துப் பல்வேறு பாராட்டுதல்களும் விமர்சனங்களும் அவர்மீது உள்ளன. அரசியலில் மாத்திரமன்றி இலக்கியம், சினிமா, வர்த்தகம் எனப்பல்வேறு துறைகளிலும் மிளிர்ந்தவர். 2018ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7 ஆம் நாள் தன்னுடைய 94 ஆவது வயதில் சென்னையில் காலமானார்.

அவரது பிறந்தநாளையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள கருணாநிதியின் நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டி ருந்தது. அவரது நினைவிடத்தில் தி.மு.க. தலை வர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார். துரைமுருகன், டி.ஆர்.பாலு, கனி மொழி, உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் கருணாநிதி நினைவிடத்தில் ம ரியாதை செலுத்தினர். கொரோனா பரவலால் கருணாநிதியின் பிறந்தநாளுக்காக எவ்வித ஆடம்பர நிகழ்வுகளையும் நடத்த வேண்டாம் எனத் தொண்டர்களுக்கு மு.க.ஸ்டாலின் அறி வுறுத்தினார். மாறாகச் சமூக ஒழுங்கைக் கடைப்பிடித்து, அவரவர் இடங்களில் தேவை யானவர்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்து கருணாநிதியின் புகழைப் போற்ற வேண்டும் என்று கட்சி நிர்வாகிகளுக்கு மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்திருந்தார்.

## அது ஒரு தேங்காய் முடிக் கட்சி பா.ஜ.க குறித்து ராதாரவி பேச்சு

பா.ஜ.க.பணம்வழங்குகின்ற கட்சியல்ல அது ஒரு தேங்காய் முடிக் கட்சி என்று நடிகர் ராதா ரவி தெரிவித்தார். ஹரி உத்ரா இயக்கத்தில் உருவாகியுள்ள 'கல்தா' படத்தின் இசை வெளி யீட்டு விழாவில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சென்னையில் நடைபெற்ற இந்த விழாவில் ராதாரவி மேலும் தெரிவித்ததாவது:

பக்கத்து மாநிலத்திலிருந்து வந்து தமிழ்நாட்டில் குப்பை கொட்டுகிறார்கள். அதை வைத்து ஒரு கதை பண்ணி யிருக்கும் இயக்குநருக்குப் பாராட்டுக்கள். எதற்கு எல் லாமோ போராடி 3, 4 கோடி கையெழுத்து எல்லாம் வாங்கு கிறோம். குப்பை கொட்டக் கூடாது என்று கையெழுத்து வாங்க வேண்டியதுதானே. அரசியல்வாதிகளை நாம்தான் வளர்க்கிறோம். யார் இந்த வீதி யைச் சுத்தமாக வைக்கிறார் களோ, அவர்களுக்குத்தான் எமது வாக்கு என்று சொல்லிப் பாருங்கள். அனைத்து வீதி களும் சுத்தமாக இருக்கும். குப்பை கொட்டுவதைச் சொல் வதால் அ.தி.மு.க. அரசைத் திட்டுகிறார் என நினைக்க வேண்டாம்.

கடந்த 50 ஆண்டுகளா கவேகுப்பைகொட்டிக்கொண்டு தான் இருக்கிறார்கள். அதே போல், கட்சி மாறிவிட்டார் ராதா ரவி. பணம் வாங்கிவிட்டார் என்கிறார்கள். அதுவும்பா.ஜ.கா வினர் பணம் தருவார்கள் என்று சொல்லலாமா? பா.ஜ.க. பணம்தருகிறகட்சியா? பா.ஜ.க. ஒரு தேங்காய் முடிக் கட்சி – என்றார்.

## அன்னாசிக்குள் குண்டு வைத்து யானைக்கு ஊட்டிய கொடூரம்!

### வயிற்றில் குட்டியுடன் யானை சாவு



அன்னாசிப் பழத்துக்குள் வெடிபொருள் களை வைத்து, அதைக் கர்ப்பமாக இருந்த யானைக்குக் கொடுத்ததில், அதை உண்ட யானை பரிதாபமாகச் சாவடைந்தது. இந் தச் சம்பவம் இந்தியாவின் கேரளா மாநி லத்தில் நடந்தது.

இது குறித்து மேலும் தெரியவருவ தாவது:-

மிகுந்த வலியுடன் காணப்பட்ட குறித்த யானை மூன்று நாள்கள்வரை அந்தப் பகுதியிலுள்ள வெள்ளையாறு என்கிற நதிக்குள் இருந்துள்ளது. தனது வாய் மற்றும் தும்பிக்கைப் பகுதியை அது மூன்று நாள்களாக நீருக்குள்ளேயே வைத்த படி இருந்துள்ளது. மூன்று நாள்க ளின் பின்னர் அவதானிக்கப்பட்ட குறித்த யானைக்குச் சிகிச்சையளிக் கப்பட்டது. வாயின் இரண்டு பக்கங் களிலும் பல காயங்கள் இருந்தன. பற்கள் இருக்கவில்லை. வலியுடன் தண்ணீரில் நின்று கொண்டிருந்த யானையை மீட்டு அறுவை சிகிச் சைக்குத் தயார் செய்வதற்கு முன்னர் அந்த யானை இறந்துவிட்டது. குறித்த காயங்களால் ஏற்படுகின்ற வலி தெரியாமல் இருப்பதற்காக அந்த யானை நிறையத் தண்ணீர் குடித்திருக்கின்றது. பின்னர் அது உடற்கூறாய்வு செய்யப்பட்டது. அப் போதுதான் அந்த யானை கர்ப்பமாக இருந்ததும், அதற்கு யாரோ அன்னாசிப் பழத்துக்குள் வெடிபொருள்களை வைத்து வழங்கியதும் தெரியவந்தது. இதுதொடர் பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிசர்கா

### இந்தியாவை சூறையாட தயாராக மற்றொரு புயல்




அரபிக்கடலில் உருவாகியுள்ள நிசர்கா என்கிற புயல் வடக்கு மகாராஷ் டிரா – தெற்குக் குஜராத் கடற்கரைப் பகுதியூடாகக் கரையைக் கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதனால் மணிக்கு 100 முதல் 120 கிலோ மீற்றர் வேகம் வரை காற்று வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் புயல் கரையைக் கடப்பதையொட்டி குறித்த இரண்டு மாநிலங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே அதிகமான கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ள நகரமாக உள்ள மும்பையில் இந்தப் புயல்மூலமான மழையால் மலேரியா, தைபேய்ட் உள்ளிட்ட நோய்கள் பரவலாம் என்று அஞ்சப்படுகிறது. இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியை இரண்டு வாரங்களுக்கு முன்பு கரையைக் கடந்த உம்பான் புயலால், இந்தியா மற்றும் பங்க ளாதேஷில் கிட்டத்தட்ட 85 பேர் வரை சாவடைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

# சமூக இடைவெளிக்கான நீளக் காலணிகள் தயார்



கொரோனா வைரஸ் காரணமாக மனிதர்கள் பொதுவெளியில் ஒருவருக்கு ஒருவரிடையிலான இடைவெளியை முறையாகக் கடைப்பிடிக்க உதவும் வகையில் ருமேனியாவைச் சேர்ந்த ஒருவர் பிரத்யேகமான காலணியைத் தயாரித்துள்ளார். பொதுவெளிக்கு வரும் மனிதர்கள் கொரோனா குறித்து நொடி தவறாமல் நினைவில் வைத்துக்கொள்ளும் திறனற்றவர்களாக இருக்கிறார்கள் என்று கூறுகின்ற ருமேனியாவைச் சேர்ந்த காலணி தயாரிப்பாளர் கிரிகோர் லூப் இதற்காக நீளமான காலணிகளைத் தயாரித்துள்ளார். ட்ரான்சில்வேனியாவின் க்ளுஜ் நகரைச் சேர்ந்த இவர் தயாரித்துள்ள நீளமான காலணிகளை அணிந்தவாறு இரண்டு நபர்கள், நேருக்குநேர் சந்திக்க நேரிட்டால் இருவருக்கும் இடையே கிட்டத்தட்ட ஒன்றரை மீற்றர் இடைவெளி பேணப்படும். காலணிககளின் முன்பகுதி மிக நீளமாக இருப்பதால், அணிந்து கொள்ளும் நபர்கள், வரிசையில் நிற்கும் போதோ, நடந்து செல்லும்போதோ முன்னால் செல்லும் நபர்களிடம் இருந்து சற்று விலகிச் செல்வது உறுதி செய்யப்படும்.

# தேறினர் 30 லட்சம் பேர்!

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தைக் கடந்துள்ளது. சீனாவின் வூகான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 215 நாடுகளுக்கு மேல் பரவியுள்ளது. இந்த நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தைக் கடந்துள்ளது. கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 64.74 லட்சத்தைத் தாண்டியுள்ளது. கொரோனாவுக்குச் சிகிச்சை பெறுபவர்களில் 54 ஆயிரத்து 550க்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனா வைரசுக்கு உலகம் முழுவதும் 3 லட்சத்து 81 ஆயிரத்துக்கும் அதிகமானோர் சாவடைந்துள்ளனர்.

# சவூதியில் 89ஆயிரம்!



சவூதி அரேபியாவில் 89 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த நாட்டின் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 1ஆயிரத்து 869 பேருக்குக் கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, சவூதி அரேபியாவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 89ஆயிரத்து 11 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாத் தாக்கத்தால் ஒரே நாளில் 24 பேர் சாவடைந்ததைத் அடுத்து அங்கு சாவுவு எண்ணிக்கை 549 ஆக உயர்ந்துள்ளது என அந்நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

# பிறேசிலில் 5.5லட்சத்தை தாண்டியது கொரோனா


2

பிறேசிலில் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தவர்களின் எண்ணிக்கை ஐந்தரை இலட்சத்தைத் தாண்டியுள்ளது. கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அமெரிக்காவைத் தொடர்ந்து, பிறேசில் இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்த நிலையில், பிறேசிலில் கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தவர்களின் எண்ணிக்கை 5.5 லட்சத்தைத் தாண்டியுள்ளது. நேற்று ஒரே நாளில் 27 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. பிறேசிலில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் சாவடைந்தவர்களின்; எண்ணிக்கை 31 ஆயிரத்து 200ஐத் தாண்டியது. அத்தோடு கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை லட்சத்து 40 ஆயிரத்தைத் தொட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அமெ.வில் நடப்பவை கவலையளிக்கின்றன

## கனடா பிரதமர் தெரிவிப்பு






அமெரிக்காவில் நடக்கின்ற சம்பவங்கள் கலக்கமடைய வைக்கின்றன என்று கனடாவின்தலைமை அமைச்சர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

அமெரிக்காவில் பொலிஸ் அதிகாரி ஒருவர், கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் பிளாய்ட் என்பவரின் கழுத்தில் 9 நிமிடங்களுக்கு மேலாகத் தனது காலால் மிதித்ததில் ஜோர்ச் பிளாய்ட் சாவடைந்தார். இந்தச் சம்பவம் அமெரிக்கா வில் பெரும் போராட்டங்களுக்கு வழிவகுத்துள்ளது. வன்முறைகள் வெடிக்கத் தொடங்கியுள்ளன. இந்தச் சம்பவம் அமெரிக்காவில் தொடரும் நிறவெறிகளுக்கு எதிரான போராட்டமாகவும் மாறியுள்ளது. இந்த நிலை யில் போராட்டக்காரர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்துகிறார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். இதனால் அவருக்கு எதிராகப் பன்னாட்டு அளவில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்த நிலையிலேயே ஜஸ்டின் ட்ரூடோ இவ்வாறு தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் நடப்பதை நாங்கள் கலக்கத்துடன் பாத்துக் கொண்டு இருக்கிறோம். இது மக்களை ஒருங்கிணைப்பதற்கான நேரம். அவர்க ளின் குரல்களை கேட்பதற்கான நேரம்' என்று ஜஸ்டின் ட்ரூடோ மேலும் தெரிவித்துள்ளார். அமெரிக்கப் பொலிஸார் பயமுறுத்துகின்றனர் என்று நியூஸிலாந்தின் தலைமை அமைச்சர் ஜெசிந்தா ஆர்டர்ன் தெரிவித்திருந்தமையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.

## 'ஜி7'ஐ 'ஜி11' ஆக மாற்றுகின்ற

# ட்ரம்ப்பின் யோசனைக்கு சீனா எதிர்ப்பு தெரிவிப்பு



ஜி - 7 அமைப்பில் இந்தியா உட்பட 4 நாடுகளைப் புதிதாக இணைக்கின்ற அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் யோசனைக்குச் சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஜி - 7 அமைப்பில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், கனடா ஆகிய(7நாடுகள்) நாடுகள் உள்ளன. இதன் தலைமையாளராக அமெரிக்கா இருந்துவரும் நிலையில் இந்த அமைப்பை ஜி -11 (11நாடுகள்) என்ற அளவுக்கு விரிவுபடுத்த வேண்டும் என்றும், புதிதாக இந்தியா, ர;யா, ஆஸ்திரேலியா, தென்கொரியா ஆகிய 4 நாடுகளைச் சேர்க்க வேண்டும் என்றும் ட்ரம்ப் யோசனை தெரிவித்தார். இந்த யோசனைக்குச் சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சீனா அயலுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் ஜாவோ லிஜியன் இது குறித்துத் தெரிவித்ததாவது:

பன்னாட்டு அமைப்புகள், மாநாடுகள் போன்றவை உலக அமைதியையும், வளர்ச்சியையும் மேம்படுத்தும்வகையில், நாடுகளிடையே பரஸ்பர நம்பிக்கைக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்று சீனா கருதுகிறது. சீனாவுக்கு எதிராக ஒரு வட்டம் போட முயன்றால், அது தோல்வியில் முடிவடையும். அது வரவேற்பைப் பெறாது - என்றார். குறித்த அமைப்பில் ரஷ்யாவைச் சேர்ப்பதற்கு பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சேனையூர் நாகம்மாள் வைகாசிப் பொங்கல் 7ஆம் திகதி நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 03

வரலாற்றுச் சிறப்பு மிக்க சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் கோவில் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா, கோவிலின் பிரதம குரு சமூக தீபம் சிவஸ்ரீ அரசரெத்தினம் தலைமையில் எதிர்வரும் 07ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த முறை கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக அடியார்களின் வருகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அடியார்களது சகல நேர்த்திக் கடன் நிகழ்வுகளும் நிறுத்தப் பட்டுள்ளன.

ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் சுகாதார நடைமுறைகளை அவசியம் பின்பற்ற வேண்டும், சமூக இடைவெளி, முகக் கவசம் என்பன மிக அவசியம் எனவும் கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.



# கட்டுத் துப்பாக்கியுடன் வாகனேரியில் ஒருவர் கைது

எஸ்.எம்.எம்.முர்ஷித்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகனேரி குளத்துமடு பகுதியில் கட்டுத் துப்பாக்கியுடன் 37 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் இன்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை விசேட அதிரடிப்படைப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவர்கள் மேற்கொண்ட சுற்றிவலைப்பின் போது கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகனேரி குளத்து மடு என்னும் பகுதியில் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கட்டுத் துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத்தும் ஈயக் குண்டுகள் கைப்பற்றப்பட்டன.

37 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சான்றுப் பொருள்களுடன் சந்தேகநபர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் பல்வேறுபட்ட சட்டவிரோதச் செயல்கள் நடைபெற்றுவருகின்றனஎனவும், இதனைத் தடுக்கும் வகையிலும், குற்றவாளிகளை கைது செய்யும் வகையிலும் பொலிஸார், விசேட அதிரடிப்படைப் படையினர் மற்றும் இராணுவபுலனாய்வுபிரிவினர்நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ் ஜய பெரமுன தெரிவித்தார்.







# மாத்தறையிலும் வெட்டுக்கிளிகள்

கொழும்பு, ஜூன் 03

குருநாகல் மாவத்தகம பகுதியில் பயிர்களை அழித்துவரும் வெட்டுக்கிளிகள், தற்போது மாத்தறை மாவட்டத்துக்குப் பரவியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறை மாவட்டம் பூருகம மற்றும் வலகந்த ஆகிய பிரதேசங்களில் உள்ள பயிர்ச் செய்கைகளை வெட்டுக்கிளிகள் சேதப்படுத்தி வருகின்றன.

வெட்டுக்கிளிகளை அழித்து பயிர்களைக் காப்பாற்றும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.



# சந்திரிகா மௌனம்!



கொழும்பு, ஜூன் 03

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அமைதியைக் கடைபிடித்து வருகின்றமை குறித்து பலரும் கவனம் செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அமைதியான சந்திரிகா, ஹொரகொல்லவில் உள்ள தனது வீட்டில் பாதுகாப்பாக உள்ளார் என தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து தப்புவதற்கு முன்னாள் ஜனாதிபதி சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை உரிய முறையில் கடைபிடிக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா பரவல் காரணமாக அவர் சில மாதங்களாக கொழும்பில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வருகை தரவில்லை.

ஹொரகொல்லவில் அவர் நடைபயிற்சி மற்றும் உடற்பயிற்சிகளில் இந்நாட்களில் ஈடுபட்டுவருகின்றார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir
சித்திரப்போட்டி
தினம் ஒரு தலைப்பு
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு
நாளைய (04.06.2020) தலைப்பு
நோயாளர் காவு வண்டி
சித்திரங்கள் தெளிவான முறையில் படம் பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

மணமகன் தேவை
இந்து வேளாளர், 1992 இல் பிறந்த, கல்வியியல் கல்லூரிப் பயிற்சி பெற்ற, உத்தரட்டாதி 1 ஆம் பாத நட்சத்திரமுடைய தங்கள் மகளுக்கு 1986 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்த அரச அல்லது வங்கிச் சேவையில் உள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புக்கு - 077 986 1127

# முகக் கவசம் இல்லையேல் திருப்பி அனுப்பும் பொலிஸார்

## வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் தீவிர நடைமுறை







எஸ்.எம்.எம்.முர்ஷித்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முகக் கவசம் அணியாமல் வருகை தருபவர்களை பொலிஸார் திருப்பி அனுப்பி வருகின்றனர்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடுகள் மற்றும் சான்றிதழ்கள், பதிவுகள் செய்வதற்கு வரும் மக்கள் முகக் கசவம் அணிந்து கைகளை கழுவி பொலிஸ் நிலையத்திற்கு வருவதை உறுதிப்படுத்துவதில் பொலிஸார் தீவிரமாக இருக்கின்றனர்.

அந்த வகையில் பொலிஸ் நிலையத்திற்கு வரும் அனைவரும் முகக் கவசங்களைக் கட்டாயம் அணிந்து வரவேண்டும் என்ற நடைமுறையும் இறுக்கமாகக் கடைப் பிடிக்கப்படுகின்றது.

முகக் கவசம் அணியாமல் வருகை தந்த பொது மக்களுக்குப் பொலிஸாரால் எச்சரிக்கை விடுவிக்கப்பட்டதுடன், அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

முகக் கவசங்களை அணியாமல் வருகை தந்தால் கைது செய்யப்படுவீர்கள் என்றும், முகக் கவசம் அணிந்து பொலிஸ் நிலையத்திற்கு வருமாறும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் எச்சரிக்கையும் செய்யப்பட்டனர்.

# திருமலை விபத்தில் லொறிச் சாரதி காயம்

அப்துல்சலாம் யாசிம்

திருகோணமலை, மே 3

திருகோணமலையில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் லொறி காயமடைந்தார்.

திருகோணமலை – ஹொரவ்பொத்தான பிரதான வீதி வில்கம் விகாரை பகுதியில் இடம்பெற்றது என்று உப்பு வெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுரத்திலிருந்து திருகோணமலை நோக்கி சீமெந்து ஏற்றுவதற்காகப் பயணித்துக்கொண்டிருந்தபோது இந்த லொறி விபத்துக்குள்ளாகிக் கவிழ்ந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் சாரதியான கண்டி – கலகெதர பகுதியைச் சேர்ந்த சன்ஜய சதுன் விக்ரமசிங்க (33வயது) காயமடைந்தார்.

அவர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.



# இணுவிலில் நேற்று வாள்வெட்டு இளைஞர் தலையில் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 03

இணுவில் – காரைக்கால் பகுதியில் இளைஞர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் தலையில் படுகாயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு தரப்புக்கு இடையே நீடித்து வந்த மோதல் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு வாள்வெட்டுச் சம்பவமாக மாறியதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

காரைக்காலைச் சேர்ந்த குழுவொன்று மற்றொரு குழுவைக் கடந்த திங்கள் தாக்கியுள்ளது. அதற்குப் பழி தீர்க்கும் வகையில் நேற்று காரைக்காலைச் சேர்ந்த குழு மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதில் இளைஞர் ஒருவர் தலையில் படுகாயமடைந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறினர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





# இராணுவ கேணல் ஒருவரின் மனைவி மகனுக்கும் தொற்று

ஹோமாகவைச் சேர்ந்த இராணுவ கேணலின் மனைவி மற்றும் மகன் ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதுடன் அவர்கள் பனாகொடை இராணுவ முகாமில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து வந்த இலங்கையர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையாற்றிய இரண்டு இராணுவ கேணல்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாகக் கண்டறியப்பட்டது.

இதனையடுத்து இந்த இராணுவ அதிகாரிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டதுடன் அவர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஹொரணையைச் சேர்ந்த இராணுவ அதிகாரியின் குடும்பத்தினருக்கு கொரோனா வைரஸ் தொற்றவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் ஹோமாகம பிட்டிபனவைச் சேர்ந்த இரா ணுவ அதிகாரியின் மனைவி மற்றும் ஒரு பிள்ளைக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது நேற்று கண்ட றியப்பட்டுள்ளது.

இந்த பிள்ளை வீட்டில் இருந்து விளையாடுவதற்காக அருகில் உள்ள இரண்டு வீடுகளுக்குச் சென்றுள்ளதால், அந்த வீடுகளில் உள்ளவர்களை தனிமைப்படுத்தி வைக்கப் பொது சுகாதார அதிகாரிகள் நேற்று நடவடிக்கை எடுத்தனர்.

கடற்படையின் கட்டளை அதிகாரி ஒருவரின் வீடும் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் அடங்குகிறது.

அந்த அதிகாரியின் மகள் பூப்பெய்தியுள்ளமையுடன், வீட்டில் உள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் அந்த நிகழ்ச்சியிலும் அவருக்குக் கலந்துகொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

# ஓ.எல், ஏ.எல். இணையவழி இலவச வகுப்புகளில் இணையலாம்!

இந்த ஆண்டு கல்விப் பொதுத் தர சாதாரண மற்றும் உயர் தர பரீட்சைக்களுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக இலவச இணைய வழி வகுப்புக்களில் உடனடியாக இணைந்துகொள்ள முடியும் என்று ஐ.பி.எஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆர்வமுள்ள மாணவர்கள் 076 685 2529 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு தங்களை இணைத்துக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இலவச இணையவழி வகுப்புக்கள் கடந்த முதலாம் திகதி முதல் தொடங்கி நடந்து வருகின்றன.

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் கடந்த வருட பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களின் மீட்டல் செயற்பாடுகளுடன் இந்த வகுப்புக்கள் மேற்கொள்ளப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கொரோனாத் தொற்று அபாயத்தினை கருத்தில் கொண்டு பாடசாலை மற்றும் தனியார் கல்வி செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் நலன் கருதி இந்த வகுப்புக்கள் தொடக்கப்பட்டுள்ளன.

# கனகராயன்குளத்தில் 14 குண்டுகள் மீட்பு!



வவுனியா, ஜூலை 03

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் 14 மோட்டார் குண்டுகள் விசேட அதிரடிப் படையினரால் இன்று மீட்கப்பட்டுள்ளன.

கனகராயன்குளம் பகுதியில் உள்ள குறிசுட்டகுளத்தை புனரமைப்பு செய்வதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்போது வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டுகள் காணப்படுவதை அவதானித்த திருத்தப் பணியாளர்கள் கனகராயன்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிசார் விசேட அதிரடிப் படையினரை வரவழைத்துச் சோதனை செய்தபோது புதையுண்டு இருந்த 14 மோட்டார் குண்டுகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றை மீட்ட அதிரடிப் படையினர் அவ்விடத்தில் மேலும் ஆயுதங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் நீதிமன்ற அனுமதி பெற்று தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கிராம அலுவலர் மீது முல்லையில் தாக்கு!

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மல்லிகைத்தீவு கிராம அலுவலர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மந்துவில் கிராம அலுவலர் இன்று நபர் ஒருவரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட கிராம சேவகர், பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளருக்கு தெரியப்படுத்தியுள்ளமையுடன், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஜனநாயகத்தின் வெற்றி



## முன்னாள் எம்.பி. வியாழேந்திரன் கருத்து

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தமை மற்றும் ஜூன் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு விடுத்தமை என்பவற்றைச் சவாலுக்குட்படுத்திய மனுக்களை விசாரணைக்கு ஏற்பதில்லை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் மூலம் தேர்தலை நடத்தக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பு ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த நாட்டின் நிலைமையினை கருத்தில்கொண்டு ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை சிறப்பாக செயற்படுவதாக அவர் பாராட்டினார்.

வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும்போது கொரோனா ஒழிப்பு விடயத்தில் இலங்கை வெற்றிகரமான முன்னெடுப்புகளைச் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் சிறந்த முறையில் நாட்டை நிர்வகித்து வரும் நிலையில் நாடாளுமன்றத்தை கூட்டவேண்டிய தேவையில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தேர்தல்

# அரசியல் கடந்த ஒற்றுமை வலுப்பெற வேண்டும்

**கொரோனா வைரஸ் காரணமாக முடங்கிப்போயிருக்கும் தருணத்தில் அனைவரும் ஒன்றித்துச் செயற்படவேண்டும். கொரோனா வைரஸால் ஏற்படுகின்ற, ஏற்படவிருக்கின்ற பொருளாதார, கல்வி, இதர சவால்களை அனைவரும் ஒற்றுமையுடன் எதிர்கொள்ளவேண்டும். தேர்தல் அரசியல் கலந்த ஒற்றுமை வலுப்பெறவேண்டும் என்றெல்லாம் உரைத்துநிற்கிறது தமிழ் மக்கள் பேரவையால் வெளியிடப்பட்டுள்ள மேற்படி ஊடக அறிக்கை. அது இங்கு தரப்படுகிறது.**

உலகமேஎதிர்பார்த்திராததருணத்தில் கொவிட் – 19 எனப்படுகின்ற ஒருவகை கொரோனோ வைரஸ் தனது தாக்குதலை ஆரம்பித்து அனைத்துலகையுமே நிலைகுலைய வைத்திருக்கிறது. இதன் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்கள் குறைந்தபட்சம் இன்னும் 3 – 4 ஆண்டுகள் வரையாவது தொடருவதற்கான தெளிவான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

இந்தச் சூழ்நிலையில் எமது சுகாதார, பொருளாதார, கல்வி, அரசியல், சமூக ஸ்திரத்தன்மையைத் தக்கவைத்துப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான திட்டமிடல்களும் தயார்ப்படுத்தல்களும் உத்வேகம் பெறவேண்டிய ஒரு தேவை எழுந்திருப்பதுடன், இதைக் குறுகியகால, இடைக்கால, நீண்டகால கண்ணோட்டங்களுடன் செயற்படுத்த வேண்டியுமிருக்கிறது. மரத்தினாலான கோடரிப்பிடியை கையகப்படுத்தியே மரங்கள் வெட்டப்படுகின்றன. அதேபோலவே இந்த எதிரி வைரஸும் எம் கலங்களுக்குள் புகுந்து எமது சொந்தக் கலங்களைத் தம்வசப்படுத்தி எமது உடலினுள் பெருக்கெடுத்து எம்மை அழிக்கத் துணிந்து நிற்கிறது. இதுவே பொதுவாகக் காலம் காலமாக எதிரிகளின் தந்திரோபாயமாகவும் இருந்து வருகிறது. எனவே நாம் பிற காரணிகளாலும் சூழ்நிலைகளாலும் நோய்க்கிருமிகளாலும் கையகப்படுத்தப்பட்டுத் தாக்கங்களையும் அழிவுகளையும் சந்திக்காமல் தடுப்பதற்கு எம்மைத் தயார்ப் படுத்தும் திட்டங்களில் ஒன்றுபடவேண்டிய அவசியம் உணரப்படுகிறது.

ஒன்றிணைந்து செயற்படவேண்டும். ஒன்று பட்டு நாம் தனிமனிதர்களாகவும் சமூக மாகவும் தேசமாகவும் பல கடமைகளை அமைதியாகவும் ஆர்ப்பரிப்பு இல்லாமலும் நிறைவேற்றவேண்டிய தேவையிருக்கிறது. சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பது என்பது நாம் சமூகத்திலே தனித்தனி மனிதர்களாகப் பிரிந்து இயங்குவது என்று அர்த்தப்படாது.

உண்மையிலேயே நாம் ஒற்றுமையான சமூகமாக, தேசமாக ஒன்றிணைந்து செயற்படவேண்டிய தேவை முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் தற்பொழுது எழுந்திருக்கிறது. பொருளாதார நெருக்கடிகள், தனிமைப்பட்டுப் போனது போல உணரும் மனத் தாக்கங்கள், கொரோனா தாக்கங்கள், கொரோனாவைப் பூச்சாண்டியாகக் காட்டிநிகழும் அராஜகங்கள், புலம்பெயர் உறவுகள் தம் சொந்தங்களிடம் வந்து போக முடியாத நிலை, அதன் ஏக்கங்கள், பொது நிகழ்வுகளில் கூடச் சந்தித்து மனம் ஆறமுடியாத உள நெருக்கீடுகள், உதவிக்கு யாருமற்ற முதியோர் எனப் பல்வேறுபட்ட சவால்களைத் திடீரென எதிர்கொள்ள வேண்டியிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே அயலவர்களினதும் ஊரவர்களினதும் ஒன்றிணைவும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளும் மேம்படுத்தப்படவேண்டிய தேவை உணரப்படுகிறது.

### பொருளாதார நெருக்கடி குறித்துச் சிந்திக்கவேண்டும்

வேலையிழப்பு, வருவாய் குறைதல், புலம்பெயர் தேசங்களிலிருந்து தத்தம் குடும்பங்களுக்குக் கிடைத்துவரும் வருவாய் குறைவு, அதிகரித்த செலவினங்கள் போன்றவற்றால் எமக்கு ஏற்பட்டிருக்கும், ஏற்படப்போகும் மிகப் பாரிய பொருளாதார நெருக்கடிகளைக் குறைப்பதற்கு தனிநபர்களாகவும் குடும்பமாகவும் சமூகமாகவும், தமிழ்த் தேசமாகவும் நாம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியிருக்கிறது.

இதற்குப் பல துறைசார் வல்லுநர்கள் பங்களிப்பும் ஆலோசனைகளும் வழங்க ஆயத்தமாக இருக்கிறார்கள். குடிவகை, புகைத்தல் போன்றவற்றிற்கான செலவீனங்களை நிறுத்துதல், ஆடம்பரச் செலவீனங்களைக் குறைத்தல், உள்ளூர் உற்பத்தி முயற்சிகளை ஊக்கப்படுத்துதல், உள்ளூர் உற்பத்திப்பொருள்களின் பயன்பாட்டை ஊக்கப்படுத்துதல், தற்சார்புப் பொருளாதாரத்தையும், விவசாயத்தையும் கட்டியெழுப்புதல், உள்ளூரிலிருந்தோ புலம்பெயர் தேசங்களிலிருந்தோ கிடைக்கும் வருவாய்களைத் திட்டமிட்டுச் செலவு செய்தல், பிறரின் நல்ல முன் முயற்சிகளைப் பாராட்டி ஊக்கப்படுத்துதல், அயலவர்கள், ஊரவர்களின் முயற்சிகளைச் சரியான திசையில் நெறிப்படுத்துதல் போன்ற சில ஆரம்ப முயற்சிகள் பயனுடையவையாக அமையும்.

**ஒன்றிணைந்து செயற்படவேண்டும். ஒன்று பட்டு நாம் தனிமனிதர்களாகவும் சமூக மாகவும் தேசமாகவும் பல கடமைகளை அமைதியாகவும் ஆர்ப்பரிப்பு இல்லாமலும் நிறைவேற்றவேண்டிய தேவையிருக்கிறது. சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பது என்பது நாம் சமூகத்திலே தனித்தனி மனிதர்களாகப் பிரிந்து இயங்குவது என்று அர்த்தப்படாது.**

### கற்றல் - கற்பித்தல் முயற்சிகள் பாராட்டுக்குரியன

எமது கல்வி நிலையைத் தக்கவைத்து மேம்படுத்துவதற்குக் கற்பித்தல், கற்றல் பொறிமுறைகளை சூழ்நிலைகளுக்கேற்றவாறு மாற்றியமைக்கும் முயற்சிகள் பல ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றமை பாராட்டுக்குரியது. இவை ஒருங்கிணைக்கப்பட்டு, குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, மெரு கேற்றப்படுவதுடன் அனைத்து மட்ட மக்களையும் சென்றடையும் வழிவகைகளையும் செயற்படுத்த வேண்டும். நாம் பின்னடைந்து விட்டோம், தளர்ந்து விட்டோம், சூழ்நிலைகள் சரியில்லை எனக் கருதி எமது அரசியல் அபிலாசைகளைக் கைவிடுவது அர்த்தமற்றதும் ஆபத்தானதுமாகும்.

### கொரோனா பாடம் கற்பித்திருக்கிறது

இந்தச் சின்னஞ்சிறு கொரோனா வைரஸ் எமக்கு ஒரு பாடத்தைக் கற்பித்து நிற்கிறது. ஒரு சொந்தமான கட்டமைப்போ, கலமோ இல்லாத இந்த வைரஸ் பல கண்டங்கள் தாண்டி பலரைத் தன் கையகப்படுத்தி, சுய விளம்பரமோ, சுய அறிமுகமோ இல்லாமல் செயலில் இறங்கி ஒரு குறுகிய காலத்திலே உலகையே புரட்டிப் போட்டிருக்கிறது. தூய்மை இல்லாது, கூட்டம் சேருவது மனித குலத்தின் பெரும் பலவீனம் என்பதைத் துல்லியமாக அறிந்து திட்டமிட்டு அதனூடாகத் தனது பரம்பலை விஸ்தரித்து வருகிறது. தொற்றுநோய்களைத் திட்டமிட்டு வெற்றி கொண்டுவிட்டோம். இனி எமது இலக்கு தொற்றாத நோய்கள் என்று கொக்கரித்த உலகின் உச்சந்தலையிலே இந்தச் சின்னஞ்சிறு வைரஸ் ஓங்கி அறைந்திருக்கிறது. இந்த நுண்ணிய வைரஸின் அசுர வல்லமையில் இருந்து நாம் கற்றுக் கொள்வதற்கு ஏராளம் இருக்கிறது.

### காலாசார, பண்பாடுகள் துணைபுரியும்

அன்று தொட்டு இருந்து வரும் எமது கலாசார விழுமியங்கள் இந்த நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த எமக்கு உறுதுணையாக அமையும். வெளியே சென்று கை, கால் அலம்பி, கழுவி வீட்டினுள் செல்லுதல், சாவுவீடு, மருத்துவமனைகள் அல்லது சனக்கூட்டமான இடங்களுக்கு சென்றால் குளித்து விட்டு வீட்டினுள் செல்லுதல், மற்றவர்களை வணக்கம் சொல்லி வரவேற்றல், வீட்டில் சமைத்த உணவை உண்ணுதல், எமது பாரம்பரிய உணவு வகைகளை உண்டு நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்தல் போன்ற சாதாரண நடவடிக்கைகள் எம்மைக் காக்க உறுதுணையாக அமையும். அத்துடன் நீண்டகாலமாக பல இக்கட்டான சூழ்நிலைகளினூடாக பயணித்த அனுபவம் இந்த அசாதாரண சூழ்நிலையை வெற்றிகொள்ள எமக்குக் கைகொடுக்கும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் முகம் தெரிந்த, முகம் தெரியாத பல தனி நபர்களும் குழுக்களும் அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஒற்றுமையாகச் செயற்படுவது மகிழ்ச்சியைத் தருகிறது. இந்தத் தேர்தல் அரசியல் கடந்த ஒற்றுமை இன்னும் வலுப்பெறவேண்டியது இன்றைய தேவையாகி நிற்கிறது. இன்றைய சூழ்நிலையை எதிர்கொள்ள, வெற்றிகொள்ள உங்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் தமிழ் மக்கள் பேரவை எதிர்பார்த்து நிற்கிறது. உங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் tpcmediaslsh@gmail.com என்ற எமது மின்னஞ்சலுக்கு அனுப்பிப் பங்களிக்கவும்.

நன்றி.

தமிழ் மக்கள் பேரவை.

# நீதிமன்றம் நியாயத் தீர்ப்பை வழங்கியது என்கிறார் டக்ளஸ்



கொழும்பு, ஜூன் 03

**தேர்தலுக்கு முகங்கொடுக்க தயாராக இல்லாதவர்கள்தான் நீ திமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்கள். ஆனால், நீதிமன்றம் நியாயத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது என்று தெரிவித்திருக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.**

நாடாளுமன்றக் கலைப்பு மற்றும் ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பு என்பவற்றைச் சவாலுக்கு உட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்ட மனுக் களை விசாரணைக்கு ஏற்பதில்லை என்று உயர் நீதி மன்றம் முடிவு செய்த து தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடிப்படையில் ஒன்றை ஒளித்து வைத்துக்கொண்டு வெளிப்படையில் இன்னொன்றை பேசுவதை போலத் தான் இந்த வழக்கும் தாக்கல் செய்யப்படிருக்கிறது. தேர்தலுக்கு முகம் கொடுக்க சிலர் இன்று தயாரில்லை. இந்த ஆழ்மன அச்சத்தில் இருப்பவர்கள் நீதியின் தீர்ப்பு வேறு விதமாக அமையும் என்று நம்பியிருந்திருக்கி றார்கள். ஆனாலும் நீதிமன்றம் நியாத்தீர்ப்பை வழங்கி யிருக்கிறது.

சரி, பிழைகளுக்கு அப்பால் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு விரைவாக புதிய நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும். அதன் ஊடாகச் சீரழிந்து போயிருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியமைக்க வேண்டும்.

சமூக, பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நாடு சீரான முறையில் நகரத் தொடங்கும் அதே வேளை ஏனைய தேசியப் பிரச்சினைகளுக்கும் யதார்த்தமான வழிமுறையில் தீர்வு காணப்பட வேண்டும். உறுதியான அரசு இருந்தால்தான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்

ஆகவே முரண்பாடுகளுக்கு அப்பால் அனைவரும் ஒன்றுபட்டு நீதிக்கு தலை வணங்க வேண்டும். நீதிமன் றம் வழங்கிய நியாயத் தீர்ப்பைப் போலவே தேர்தலில் மக்கள் தீர்ப்பும் நியாயத் தீர்ப்பாக அமையும் என்பது உறுதி என தெரிவித்துள்ளார்.

## வீட்டுத் தோட்டப் பொதிகள் 30,000 இலவச விநியோகம்







எஸ்.எம்.எம்.முர்ஷித்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கணபதிப்பிள்ளை பொன்னம்மா (கே.பி) பௌண்டேசன் நிதி உதவி யுடன் வாழைச்சேனை தூய துளிர் அமைப்பு முப்பதாயிரம் வீட்டுத் தோட்ட பொதியினை இல வசமாக வழங்கத் தொடங்கியி ருக்கிறது.

வாழைச்சேனை பிரதேச செய லகம், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகம், பட்டிப்பளை பிரதேச செயலகம் ஆகியவற்றில் கடமை புரியும் அரச உத்தியோ கத்தர்களுக்கு மரக்கன்றுகள் மற் றும் விதைப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் கத்தரி மற்றும் கொச்சி மரக்கன்றுகளும், வெண்டி, கீரை, பயற்றை மற்றும் அவரை போன்ற விதைப் பொதிகளும் உள்ளடங்கி யதாக அரச உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்த மரக்கன்று வழங்கும் நிகழ்வில் வாழைச்சேனை பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரம், பட்டிப்பளை பிரதேச செயலாளர் திருமதி.த.தினேஷ், ஆலோசகர் கே.கணேசநாதன், செயலாளர் வை.விஜயலக்ஷ்மணன், மற்றும் அரச உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திருமண புரியாணி நஞ்சானதால் ஆரையம்பதியில் 30 பேர் பாதிப்பு

மட்டக்களப்பு – ஆரையம்பதி பகுதி யில் திருமண வீட்டில் பரிமாறப்பட்ட உணவு ஒவ்வாமையாகியதால் 30 பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று இரவு ஆரையம்பதி கோயில்குளம் பகுதியில் திருமண வீடு ஒன்றில் சுமார் 200 பேர் வரை கோழி இறைச்சி பிரியாணியை உண் டனர்.

பிரியாணியை உண்டவர்களில் அதிகமானோர் மயக்கம், வாந்தி, காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்டு ஆரையம்பதி மாவட்ட வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்கான மட்டக் களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களுள் பெண்கள் சிறுவர்களும் அடங்குகின்றனர்.

சம்பவம் தொடர்பாக சுகாராதார பகுதியினர் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

இதேவேளை, இன்று காலையும் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் வந்து கொண்டிருந்தனர் என்றும் ஆரையம் பதி மாவட்ட வைத்தியசாலை அதி காரிகள் தெரிவித்தனர்.

## குறிஞ்சாக்கேணி பாலம் நாளை மூடப்பட்டிருக்கும்

ஹஸ்பர் ஏ ஹலீம்

கிண்ணியா குறிஞ்சாக்கேணி கடல் மேல் பால வீதி நாளை வியாழக் கிழமை செப்பனிடப்பட உள்ளதால் மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருக்கும் என்று அறிவிக் கப்பட்டிருக்கிறது.

மக்களை ஒத்துழைப்பு வழங்கு மாறு கேட்டுக்கொள்வதாக கிண்ணியா நகர சபை உறுப்பினர் எஸ்.எச்.எம். நளீம் தெரிவித்தார்.

நாடு முழுவதும் நாளை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் நிலை யில் பாலத்தின் மறுசீரமைப்பு நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன என்றும் அவர் தெரிவித் தார்.

எனினும் அத்தியாவசிய தேவைக் காக வெளியே செல்லும் மக்களில் இந்தப் பாதையைப் பயன்படுத்துப வர்கள் மாற்று வழிகளைப் பயன் படுத்துமாறும் நகர சபை உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.



## வவுனியாவில் மல்லிகை செய்கையாளர் கடும் பாதிப்பு





கொவிட் – 19 தாக்கம் காரணமாக வவுனியாவில் மல்லிகைச் செய்கையா ளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியாவில் விவசாய திணைக்களம் மற்றும் இந்திய துணைதூரகம் என்பவற் றின் அனுசரணையில் வவுனியாவில் 10 பேர் வரையில் மல்லிகைச் செய்கை யில் ஈடுபட்டு வந்தனர்.

ஒரு கிலோ மல்லிகை மொட்டு 3,000 ரூபாய்க்கும், ஒரு முழம் பூ மாலை 50 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. அதன் மூலம் மல்லிகைச் செய் கையாளர்கள் கணிசமான வருமானம் பெற்று வந்தனர். பலருக்கு இந்த மல்லி கைத் தோட்டங்களின் மூலம் வேலை வாய்ப்பும் கிடைத்திருந்தது.

வெளிநாடுகளுக்கு மல் லிகைப் பூ ஏற்றுமதியும் இடம்பெற்றது. ஆனால் கொவிட் 19 தாக்கம் காரண மாக ஊரடங்கு சட்ட, போக்கு வரத்து தடை, திருமண நிகழ் வுகள், விசேட பூஜைகள் உள் ளிட்ட மங்கள நிகழ்வுகளுக் குத் தடை என்பவற்றால் மல் லிகைக்கான கேள்வி முற்றி லும் இல்லாமல் போய்விட்டது.

இதனால் பூத்து குலுங்கும் மல்லிகை வாடி நிலத்தில் விழுவதாக செய்கையா ளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

விவசாய திணைக்களத்தினால் 2 வரு டங்களுக்கு முன்னர் 50 மல்லிகைக் கன்றுகள் வாழ்வாதாரத்திற்காக வழங்கப் பட்டன. அதனைக் கொண்டு கால் ஏக்கர் நிலப்பரப்பில் தோட்டம் அமைத்தேன். மேலும் மல்லிகைச் செடிகளை பதிவைத்து தற்போது 300 வரையான கன்றுகளை நாட்டினேன். இம் மல்லிகை மூலம் 40 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் ரூபாய் வரை மாத வருமானத்தை பெற்று வந் தேன். நான்கு பெண்களுக்கு வேலைவாய்ப் பையும் வழங்கியிருந்தேன். தற்போது எல்லாம் இழக்கப்பட்டுவிட்டன என்கிறார் மரையடித்த குளம் பகுதியில் வாழும் சாருமதி.

இவரைப் போன்றே தமது குடும்ப வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறும் மல்லிகைச் செய்கையாளர்கள், தமக்கு சந்தை வாய்ப்பு வசதியை ஏற்படுத்தி தருமாறும், அதன் மூலம் மேலும் பல குடும்பங்களை வாழ வைக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.06.2020 இல் வெளியிடப்பெற்றது.